14/8/2020

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி - கூட்டுறவுத் தணிக்கைத் துறை – கருணை அடிப்படையில் பணிநியமனம் -(திரு).ப்பி.அம்மையப்பன், தேர்வுநிலை முதுநிலை கூட்டுறவுத் தணிக்கையாளர், பணியிடை இறப்பு - அவரது வாரிசான திரு.அ.கௌதமராஜ் என்பவருக்கு 04.02.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் - பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை

அரசாணை (நிலை) எண்.318

நாள்:13.08.2020,
சார்வரி, ஆடி - 29,
திருவள்ளுவர் ஆண்டு - 2051.

படிக்கப்பட்டது:

1. அரசாணை(நிலை)எண்.100. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த் துறை நாள் 01.08.2018.
2. கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர், அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 5943/2018/அபஅ-3, நாள் 01.02.2019.
3. கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.29683/2017/அபஅ.3, நாள் 14.01.2020.
4. அரசாணை நிலை எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள்.23.01.2020.

************

ஆணை:-

கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், விருதுநகர், கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் தேர்வுநிலை முதுநிலை கூட்டுறவுத் தணிக்கையாளராகப் பணிபுரிந்து வந்தபோது பணிக்காலத்தில் 06.06.2003 அன்று இயற்கை எய்திய, (திரு).ப்பி.அம்மையப்பன், அவர்களுடைய வாரிசான திரு.அ.கௌதமராஜ்

என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின் வழி, கருணை அடிப்படையில், கூட்டுறவுத் தணிக்கை இயக்ககக் கட்டுப்பாட்டில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, தனியர் 04.02.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார் என்றும், எனவே, தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 04.02.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. திரு.அ.கௌதமராஜ் 01.04.1981 அன்று பிறந்துள்ளார். தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியான 10-ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளார். கருணை அடிப்படையில் பணிநியமனம் தொடர்பான அனைத்து விதிகள்/ நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், கூட்டுறவுத் தணிக்கை இயக்ககக் கட்டுப்பாட்டில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.அ.கௌதமராஜ் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 04.02.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இதனால் எழக்கூடிய நிலுவைப் பணப்பயன்களை பெறத் தனியர் தகுதியுடையவர் ஆகிறார். தனியர், இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி நியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டுமென்பதை உறுதிசெய்யுமாறு கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.9536/க்யூ.1/2020-2, நாள்:29.07.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.17919/ஜி2/2020-1, நாள்:12.08.2020 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.கிருஷ்ணன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர் :
கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர், சென்னை-35.
(பணிப்பதிவேடு மற்றும் அசல் சான்றிதழ்களுடன்)

திரு.அ.கௌதமராஜ், இளநிலை உதவியாளர் (இயக்குநர் மூலமாக)

நகல்:
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (கியூ-1)த் துறை, சென்னை-09
பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்த (ஜி-2)த் துறை, சென்னை-09.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

14/08/2020

பிரிவு அலுவலர்.

14/8/2020